| | |
|---|---|
| **UG–035** | **BLT–21** |

# B.A./B.Lit. DEGREE EXAMINATION — JUNE, 2019.

## Second Year

மொழித் திறன்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. பேச்சுக்கலையின் பிறப்பிடமாக விளங்கும் நாடு எது?

2. திரு.வி.க., நாவண்மைக்குத் துணை செய்வனவாக எவற்றைக் கூறுகின்றார்?

3. "வி" (V) என்றால் வெற்றி என இரு விரல்களை விரித்துக் காட்டியவர் யார்?

4. "வியாசம் மனக்குரங்கின் தங்கு தடையற்ற ஓட்டம்" எனக் கூறியவர் யார்?

5. கட்டுரையின் இன்றியமையாப் பண்பு எது?

6. நும் பாடப்பகுதியில் எத்தனை வகைக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன?

7. செய்திக் கட்டுரைகள் எத்தனை வகைப்படும்?

8. முகப்பு என்றால் என்ன?

9. இதழாளர் கவனத்தில் கொள்ள வேண்டிய ‘H’ என்பதன் பொருள் என்ன?

10. வணிகக் கடிதம் எத்தனை வகைப்படும்?

11. “ஆவணம்” என்ற சொல் சங்க இலக்கியத்தில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

12. “அடுக்கி வரைதல்” என்பதை ஆங்கிலத்தில் எவ்வாறு கூறுவர்?

13. நூல் மதிப்புரை எத்தனை வகைப்படும்?

14. காலத்தைக் காட்டும் கண்ணாடி எது?

15. திரைப்படத் திறனாய்வு எத்தனை வகைப்படும்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. மேடைப் பேச்சின் இன்றியமையா இலக்கணம் தருக.

17. பேச்சுக் கலைக்கும், போர்க் கலைக்கும் அவசியம் எது?

18. தன் வரலாற்றுக் கட்டுரை என்றால் என்ன?

19. தலையங்கம் எழுதுவோர் யார்?

20. கடிதம் – பொருள் தருக.

21. எந்த நாயன்மாரின் வரலாற்றில் ஆவணம் குறித்த செய்தி இடம் பெறுகிறது?

22. நச்சிலக்கியங்கள் என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மேடைப் பேச்சாளர்க்கு உரிய முக்கியத் தகுதிகள் யாவை?

24. கட்டுரைகளின் பொது உள்ளடக்கங்கள் எவை?

25. இலக்கியக் கட்டுரைகளின் வகைகளைக் கூறி, அவற்றுள் ஒன்றை விளக்குக.

26. இதழ் ஒன்றிற்கு வாசகர் கடிதம் வரைக.

27. கடிதத்தின் அமைப்பு முறையை எழுதுக.

28. ஆவணங்கள் எழுதும் முறையைக் குறிப்பிடுக.

29. நூல் மதிப்புரை எழுதுவோர்க்கு உரிய தகுதிகளைச் சுட்டுக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

30. பேச்சுக் கலையின் நோக்கும், போக்கும் குறித்துக் கட்டுரை வரைக.

31. கட்டுரைகளின் வகைகளை விவரி.

32. அரசாங்கம் செய்திகளை வழங்கும் முறைகளைக் குறித்து விவரி.

33. அலுவலகக் கடிதத்தின் அமைப்பையும், வகைகளையும் விளக்குக.

34. இலக்கியத் திறனாய்வின் வகைகளைச் சுட்டி, அவற்றுள் இரண்டினை விளக்குக.

| **UG–036** | **BLT-22** |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE 2019.

Second Year

Functional Tamil

வானொலி தொலைக்காட்சிக் கலை

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. பண்பலை என்றால் என்ன?

2. மார்க்கோனிக்கு 1901-இல் வழங்கப்பட்ட நோபல்பரிசு எந்த துறைக்கானது?

3. கியான்வாணியின் பணி என்ன?

4. தலைமுறையின் எதிரொலி யாருக்கான நிகழ்ச்சி?

5. செய்திகள் நிகழ்ச்சி எந்த வடிவத்தில் அடங்கும்?

6. தொலைக்காட்சித் தகவல்மொழி எத்தனை வகைப்படும்?

7. API என்றால் என்ன?

8. செய்திகள் கிடைக்கும் வாயில்கள் இரண்டினைச் சுட்டுக.

9. எதிர்பாராத செய்திகளுக்கு இரு சான்று தருக.

10. இருவரோ, மூவரோ உரையாடுவதாக அமையும் குறுகிய நாடக நிகழ்ச்சியின் பெயர் என்ன?

11. "விளம்பரம்" என்பதன் வேர்ச் சொல் என்ன?

12. முன் பணிகள் என்பதன் வேறு பெயர் என்ன?

13. வழங்குதல் என்றால் என்ன?

14. "சாமக்கோடங்கி" நிகழ்ச்சி எந்த நிலையத்தாருடையது?

15. வானொலி நேர்முக வர்ணனை எத்தனை வகைப்படும்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஒரு பத்தி அளவில் விடை தருக

16. "யுவவாணி" என்றால் என்ன?

17. மரபுவழி ஊடகம் என்றால் என்ன?

18. வானொலி நிலையத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?

19. ஸ்டிரிங்கர் என்பவர் யார்?

20. பத்திரிக்கைச் செய்தியின் நான்கு வடிவங்களைக் கூறுக.

21. விளம்பரம் - பொருள் தருக.

22. எதிரொலி என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.

23. வானொலியின் நடத்தை விதிகளைப் பட்டியலிடுக.

24. தொலைக்காட்சி கண்டுபிடிப்பின் முன்னோடிகள் யாவர்?

25. வானொலி நிகழ்ச்சிகள் எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?

26. பொருள் அடிப்படையில் செய்திகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

27. மின்னணு செய்தி சேகரித்தல் என்றால் என்ன? விளக்குக.

28. முதல் தர விளம்பரத்தின் பண்புகள் யாவை?

29. தொலைக்காட்சித் தொகுப்பாளர் குறித்துக் குறிப்பு வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

30. தொலைக்காட்சியின் மூன்று படிநிலைகளை விளக்குக.

31. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வகைகளை விளக்குக.

32. செய்தி எழுதும் போது கையாள வேண்டிய முறைகளைப் பட்டியலிடுக.

33. ஊடக விளம்பரத்தின் பண்புகளை விளக்குக.

34. நேர்முக வருணனை குறித்துக் கட்டுரை வரைக.